## புதுக்கோட்டை நகராட்சி

### புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்டுள்ள அவசரக்கூட்ட மன்ற பொருள்

### நாள்.20.08.2018

<table>
<tr>
<td>பொருள் எண்..1</td>
<td>
துாய்மை இந்தியா திட்டத்தினை செயல்படுத்த மாநில அளவிலான உயர்மட்ட அதிகார குழுவின் State High powered committee (SHPC) 7வது கூட்டம் 13.08.2018ம் தேதி சென்னையில் தலைமை செயலகத்தில் நடைபெற்றது. அதில் புதுக்கோட்டை நகராட்சிக்கு துாய்மை இந்தியா திட்டத்தின கீழ் கீழ்கண்ட பணிகள் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>
1) கூடுதல் தனி நபர் கழிப்பிடம் கட்டுதல் குறியீடு<br>
மொத்த வீடுகள் :– 32670<br>
கூடுதல் தனிநபர் கழிப்பிடம் கட்டுதல் குறியீடு :– 613<br>
2) பரவலாக்கப்பட்ட நுண்ணிய உராமாக்கும் மையம் அமைத்தல் (Decentralised Micro compost centre)
<table>
<tr><th>வ. எண்</th><th>எண்ணிக்கை (Numbers)</th><th>கொள்ளளவு (Capacity)</th><th>அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை (Estimate)</th></tr>
<tr><td>1.</td><td>2 Nos.</td><td>4MT</td><td>90.00 இலட்சம்</td></tr>
<tr><td>2.</td><td>3 Nos.</td><td>3MT</td><td>120.00 இலட்சம்</td></tr>
<tr><td>3.</td><td>1 No.</td><td>2MT</td><td>30.00 இலட்சம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒதுக்கீட்டில் கீழ்கண்ட Micro compost centre(MCC) கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>கொள்ளளவு</th><th>மதிப்பீட்டுத் தொகை</th></tr>
<tr><td>I)</td><td>(1) போஸ்நகரில் நுண்ணிய உரமாக்கும் மையம் கட்டுதல் (MCC)</td><td>4MT</td><td>45.00 இலட்சம்</td></tr>
<tr><td></td><td>(2) சந்தைப்பேட்டை பகுதியில் நுண்ணிய உரமாக்கும் மையம் கட்டுதல் (MCC)</td><td>4MT</td><td>45.00 இலட்சம்</td></tr>
<tr><td></td><td></td><td>**8MT**</td><td>**90.00** இலட்சம்</td></tr>
</table>
</td>
<td>**தீர்மானம் எண்–857**<br>அலுவலக குறிப்பு அ. ஆ. இ. ஈ. உ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| II) | (1) சண்முகா நகரில் (STPக்கு முன்) நுண்ணிய உரமாக்கும் மையம் கட்டுதல் (MCC) | 3MT | 40.00 இலட்சம் |
| | (2) சமத்துவபுரம் பகுதியில் நுண்ணிய உரமாக்கும் மையம் கட்டுதல் (MCC) | 3MT | 40.00 இலட்சம் |
| | (3) நகராட்சிக்கு சொந்தமான அரசினர் மறு வாழ்வு இல்லம் (Poor Home) இடத்தில் நுண்ணிய உரமாக்கும் மையம் கட்டுதல் (MCC) | 3MT | 40.00 இலட்சம் |
| | | **9MT** | **120.00** இலட்சம் |
| III) | கோவில்பட்டி சாலையில் நுண்ணிய உரமாக்கும் மையம் கட்டுதல் (MCC) | 2MT | 30.00 இலட்சம் |
| | | **2MT** | **30.00 இலட்சம்** |

3) <u>முதல்நிலை குப்பை சேகரிப்பு</u>

| வ.எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1) | பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல் (Battery operated Vehicle) | 10 Nos | 18.00 |
| 2) | வணிக உபயோக இலகுரக வாகனம் வாங்குதல் (Light commercial Vehicle) | 3 Nos | 16.80 |

மேற்கண்ட பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery operated Vehicle) மற்றும் வணிக உபயோக இலகுரக வாகனம் (Light commercial Vehicle) வாங்குவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.08.2018ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் 400 House hold-க்கு 1 பேட்டரி மூலம் இயங்கும் வாகனமும் (BOV), 1200 House hold-க்கு 1 வணிக உபயோக இலகுரக வாகனம் (LCV) வாங்க வாகனங்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே திருத்திய அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கலாம்.

| | | |
|---|---|---|
| | **4)** திருகட்டளை சாலையில் உள்ள உரக்கிடங்கில் பழைய குப்பைகளை **60000** M3 உயிரி செரிமான கொதிகலன் (Bio mining) முறையில் துாய்மை படுத்துதல் ரூ.**395.00** இலட்சம்<br><br>மேற்கண்டவாறு State High powered committee-ல் புதுக்கோட்டை நகராட்சிக்கு துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM) அனுமதிக்கப்பட்டுள்ளது. இது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:–<br>அ) மன்றம் பதிவு செய்யலாம்.<br>ஆ)தனிநபர் கழிப்பிடம் கூடுதல் ஒதுக்கீடு **(**குறியீடு**) 613** எண்ணிக்கை கட்டுவதற்கும், கட்டப்பட்டுவருவதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்<br>இ) பரவலாக்கப்பட்ட நுண்ணிய உரமாக்கும் மையம் (MCS) **6** இடங்களில் கட்டுவதற்கும் அதற்குரிய மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்<br>ஈ) பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் **(**BOV) மற்றும் வணிக உபயோக இலகுரக வாகனம் **(**LCV Vehicle) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையின்படியும் வழிகாட்டுதலின் படியும் திருத்திய பிரேரணை அனுப்பி அனுமதி பெற மன்றம் அனுமதிக்கலாம்.<br>உ) உயிரி செரிமான கொதிகலன் (Bio mining) அமைக்கவும் **(60000** MT**)** மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.3987/2018/E1 ) | |

**ஒம்.ஜி.சுப்பிரமணியன்**
**தனி அலுவலர்**
**மற்றும் நகராட்சி ஆணையர்(பொ)**
**புதுக்கோட்டை நகராட்சி**

**புதுக்கோட்டை நகராட்சி**

**புதுக்கோட்டை நகராட்சி நகர்மன்றத்தின் தனி அலுவலர் அவர்களின் தீர்மானத்திற்கென கொண்டுவரப்பட்டுள்ள இயல்புக்கூட்ட மன்ற பொருள்கள்**

**நாள்.27.08..2018**

| | | |
|---|---|---|
| பொருள் எண்..1 | நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் ஜுலை–2018 மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது,<br>**அலுவலக குறிப்பு பதிவு செய்யலாம்** | **தீர்மானம் எண்–858**<br>அலுவலக குறிப்பு ஏற்று பதிவு செய்யப்பட்டது. |
| பொருள் எண்..2 | புதுக்கோட்டை நகராட்சி சர்வே எண்204/2,3,4,6 205/3ல் அமைந்துள்ள 3441.00 ச.மீ. பரப்பளவு இடத்தில் உத்தேச மனைப்பிரிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை இயக்குநர், சிவகங்கை அவர்களின் ந.க.எண்.2375/2018/சிம3 நாள்22.05.18ல் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய உத்தேச மனைப்பிரிவில் உள்ள சாலைகள் A-A, B-B, C-C- ஆகியவற்றின் பரப்பளவு 885.38 ச.மீ. மற்றும் பூங்கா ஒதுக்கீடு இடம் –256.08 ச.மீ. மனைப்பிரிவு உரிமையாளர்கள் திரு.S.ராமன் மற்றும் திரு.S.லெட்சுமணன் ஆகியோர் தானப்பத்திரம் எண்2340 நாள்.11.06.2018ல் நகராட்சிக்கு தானமாக பத்திர பதிவு செய்து ஒப்படைப்பு செய்துள்ளனர். மேலும் மனுதாரர் இடத்தில் அமைய உள்ள தெரு மின் விளக்கு , குடிநீர் வசதி மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு வசதி ஆகியவற்றிற்கான தொகை ரூ.1,55,000/–ஐ நகராட்சி கருவூலத்தில் 09.08.2018 அன்று செலுத்தியுள்ளார். அரசாணை எண்.79 வீ.வ (ம) ந.பு.வ.துறை நாள்.04.05.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.16091/2016/எல்பி, நாள் 11.05.2017 ஆகியவற்றின்படி உத்தேச மனைப்பிரிவு இடத்தில் நிலமதிப்புத் தொகையின் 3% தொகை ரூ.2,45,768/–ஐ அரசுக்கணக்கில் 07.08.2018ல் செலுத்தியுள்ளார். எனவே , மனுதாரர் உத்தேச மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1.உத்தேச மனைப்பிரிவு இடத்தில் உள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடத்தினை நகராட்சிக்கு தானமாக பதிவு செய்து கொடுத்துள்ளதினை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>2.மனுதாரருக்கு இறுதி உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | **தீர்மானம் எண்–859**<br>அலுவலக குறிப்பு 1. 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..3 | புதுக்கோட்டை நகரம் நகரளவு எண்.4691/2,4697/2–இல் அடங்கிய 11064.0 ச.மீ. பரப்பளவு இடத்தினை மனைப்பிரிவு அனுமதி கோரியதன் பேரில் உறுப்பினர் செயலர் புதுக்கோட்டை கூட்டு உள்ளூர் திட்டக் குழுமம் /நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் , சிவகங்கை கடிதம் ந..எண்.1879/2018 சி.ம.3 நாள்.22.05.2018–ல் நிபந்தனை களுக்குபட்டு மனைப்பிரிவு சாலை | **தீர்மானம் எண்–860**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அமைப்பு வரைபடம் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி பொறியாளர் 20.8.2018ந்தேதிய குறிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்ட சாலை அமைப்பு வரைபடத்தின்படி தார்சாலைகள், வடிகால்கள், சிறு பாலங்கள் அமைக்கட்டுள்ளதாகவும் மேலும் பாதாள சாக்கடை கட்டமைப்பு மற்றும் ஆளிரங்குகுழி அமைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் குடிநீர் பகிர்மானக்குழாய் அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/– மற்றும் தெருவிளக்கு மின் கம்பங்கள் அமைக்க ரூ.1,20,000 செ.சீ.எண்109/01/1/18–19/0008868–ன்படி நாள்21.08.2018 தொகை செலுத்தப்பட்டுள்ளது.<br>மனைப்பிரிவு உரிமையாளர் நகராட்சிக்கு வரைபடத்தின்படி மனைப்பிரிவு சாலைகள் 1) தென்வடல் AA சாலை 1795.11 ச.மீ. 2. BB சாலை 256 ச.மீ. 3. தென்வடல் C to C கீழ் மேல் சாலை 252.22 ச.மீ. 4.DD சாலை 247.84 ச.மீ. 5 E to E கீழ்மேல் சாலை 242.51 ச.மீ. 6) F to F கீழ் மேல் சாலை 237.18 ச.மீ. 7) G to G கீழ்மேல் சாலை 85.45 ச.மீ. 8) பூங்கா 797.17 ச.மீ பூங்கா இடத்தினை தானபத்திரம் எண். 2865 நாள்.12.07.2018–ல் பதிவு செய்து ஒப்படைத்துள்ளார் மேற்படி மனைப்பிரிவு சாலைகள், பூங்கா மற்றும் பாதாள சாக்கடை கட்டமைப்புகளை நகராட்சி தானாமாக ஏற்றுக்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் (ந.க.எண்3174/2018/எப்2)<br><br>அலுவலக குறிப்பு :– நகர் ஊரமைப்புதுறையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி சாலைகள், பூங்கா, பாதாள சாக்கடை ஆகியவற்றை நகராட்சி ஏற்றுக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| பொருள் எண்..4 | அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.7.2018ல் 1.4.2018ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு ( Revision 2018 ) மேற்கொள்ள அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 16.8.2018ம் தேதிய சொத்து வரி சீராய்வு தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகளின்படி சொத்துவரி சீராய்வு தொடர்பான நாளிதழ் விளம்பர அறிவிப்பு , மாஸ்டர் பதிவேடு ( Master Legdger ) தயார் செய்தல் , சொத்துவரி சுய மதிப்பீட்டு படிவங்கள் அச்சடித்தல் நகல் எடுத்தல் மற்றும் சிறப்பு அறிவிக்கை (Special Notice ) சொத்துவரி விதிப்புதாரர்களுக்கு கூரியர் மூலம் சார்வு செய்திடவும் மற்றும் இதர செலவுகளுக்கும் ஆகும் உத்தேச செலவின ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க. எண்.7577/2018/அ1) | <u>**தீர்மானம் எண்–861**</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..5 | அரசு ஆணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.7.2018ல் 1.4.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும் குடியிருப்பு கட்டிடங்களுக்கு 50 சதவிகிதத்திற்கு மிகாமலும், வாடகை குடியிருப்பு | <u>**தீர்மானம் எண்–862**</u><br>அ. பதிவு செய்யப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்து வரி உயர்வு செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>இந்நிலையில் அரசு ஆணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.7.18ல் ஏற்கெனவே அரசாணையில் உத்தரவிடப்பட்ட வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் 100 சதவிகிதத்திற்கு மிகாமல் என்பதை தற்போது 50 சதவிகிதத்திற்கு மிகாமல் சொத்துவரி உயர்வு செய்திட திருத்திய உத்தரவு வழங்கி அனுமதிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி அரசாணையின் விவரங்கள் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. பதிவு செய்யலாம்.<br>2. அரசாணையின்படி 1.4.2018ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட அனுமதிக்கலாம் ( 7577/2018/அ1 )</td>
<td>ஆ.அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..6</td>
<td>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் 16.08.2018ம் தேதிய ஆய்வு கூட்ட அறிவுரையில் நகரில் முதல்நிலை குப்பைகள் சேகரம் செய்யும் பணிக்கு (Primary collection) பேட்டரி மூலம் இயங்கும் வாகனமும் (BOV) மற்றும் வணிக உபயோக இலகுரக வாகனம் (LCV) பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி புதுக்கோட்டை நகராட்சி 21.95 ச.கி.மீ பரப்பளவு கொண்ட மொத்தமுள்ள 42 வார்டுகளில் மொத்தம் 585 தெருக்களும் சுமார் 40000 வீடுகளும் உள்ளது. இதில் முதல்நிலை குப்பைகள் சேகரம் செய்யும் பணிக்கு (Primary collection) 400 வீடுகளுக்கு ஒரு பேட்டரி மூலம் இயங்கும் வாகனமும் (BOV) மற்றும் 1200 வீடுகளுக்கு ஒரு வணிக உபயோக இலகுரக வாகனம் (LCV) என சேகரிக்கப்பட்ட குப்பகைளை 6 நுண்ணிய உரமாக்கும் மையங்களுக்கு (MCC) கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஒரு வாகனம் 2 நடை வீதம் குப்பைகள் சேகரிக்க கீழ்கண்டவாறு வாகனங்கள் தேவையாக உள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>தேவைப் படும் வாகன ங்களின் எண்ணி க்கை</th><th>ஒதுக்கீடு செய்யப் பட்டது</th></tr>
<tr><td>1)</td><td>பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல் (Battery operated Vehicle)</td><td>50 Nos</td><td>10 Nos</td></tr>
<tr><td>2</td><td>வணிக உபயோக இலகுரக</td><td></td><td></td></tr>
</table>
</td>
<td><u>தீர்மானம் எண்–863</u><br>அலுவலக குறிப்பு அ, ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| ) | வாகனம் வாங்குதல் (Light commercial Vehicle) | 11 Nos | 3 Nos |
| | | மொத்தம் | 13 Nos |

எனவே தூய்மை இந்தியா இயக்கம் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்கள் போக கீழ்கண்டவாறு கூடுதலாக தேவைப்படும் வாகனங்களுக்கும் அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| [illegible] | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1) | பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் வாங்குதல் (Battery operated Vehicle) | 40 Nos | 72.00 |
| 2) | வணிக உபயோக இலகுரக வாகனம் வாங்குதல் (Light commercial Vehicle) | 8 Nos | 44.80 |
| | | மொத்தம் | 116.80 |

அலுவலக குறிப்பு:–

(1) மன்றம் அனுமதிக்கலாம்

(2) மேற்படி வாகனங்கள் விநியோகம் செய்ய தேவைப்படும் நிதியினை தூய்மை இந்தியா இயக்கம் (SBM) திட்டத்தின் கீழ் முழுமான்யமாக வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம். (ந.க.எண்.3987/2018/இ1)

| | | |
|---|---|---|
| பொருள் எண்..7 | **இந்நகராட்சிக்கு சொந்தமான பாதாள சாக்கடை அடைப்பு அகற்றும் (Jet Rodding Machine ) வாகனம் TN-55-AP-** | **தீர்மானம் எண்–864** |

<table>
<tr><td></td><td>7600க்கு தகுதிச்சான்று முடிவடைவதால் 2018-2019ம் ஆண்டிற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், புதுக்கோட்டையில் தகுதிச்சான்று பெற வேண்டியுள்ளதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்திட, அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.1.60இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை 2018-2019ம் ஆண்டு குடிநீர் நிதியின் கீழ் செலவிட அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம் ( ந.க.எண்.5282/2018/இ2 )</td><td>அலுவலக குறிப்பு 1, 2 ,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..8</td><td>இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 02.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சதில்</th><th>ஒப்பந்ததாரா் பெயா் (திருவாளா்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சி வாா்டு எண்.39 மறைமலை நகா் பூங்காவில் onsite comost yard அமைத்தல்</td><td rowspan="2">1.75</td><td>கே. பரமசிவம்</td><td>154046.00</td><td>மதிப்பீட்டை விட 0.26% குறைவு</td></tr>
<tr><td>ஆா். மணிகண்டன்</td><td>156603.00</td><td>மதிப்பீட்டை விட 1.37% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சி வாா்டு எண்.40 வள்ளியப்பா நகா் பூங்காவில் onsite comost yard அமைத்தல்</td><td rowspan="2">1.75</td><td>சி.அரவிந்தன்</td><td>154077.0</td><td>மதிப்பீட்டை விட 0.247% குறைவு</td></tr>
<tr><td>ஆா். மணிகண்டன்</td><td>156647.00</td><td>மதிப்பீட்டை விட 1.40% அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">3.</td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சி வாா்டு எண்.40 பாரதி நகா் பூங்காவில் onsite comost yard அமைத்தல்</td><td rowspan="2">1.75</td><td>கே. பரமசிவம்</td><td>154015.00</td><td>மதிப்பீட்டை விட 0.28% குறைவு</td></tr>
<tr><td>ஆா். மணிகண்டன்</td><td>156583.00</td><td>மதிப்பீட்டை விட 1.36% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :–<br>மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின்</td><td><u>தீா்மானம் எண்–865</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.6338/2018/இ1 ) | |
| பொருள் எண்..9 | புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை நகராட்சியில் 2002 ஆம் வருடத்தில் பல்லுயிர் பன்மியச் சட்டம் (மத்தியசட்டம்) , 2004ஆம் வருடத்திய பல்லுயிர் பன்மியவிதிகள் மற்றும் 2017ஆம் வருடத்திய தமிழ்நாடு பல்லுயிர் பன்மியவிதிகள்ஆகியவற்றில் தொகுத்தளிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க, இந்நகராட்சியில் தனித்துவமிக்க தாவரங்கள் மற்றும் பல்லுயிர்கள்ஆகியவற்றின் பாதுகாப்பிற்காக பின்வரும் உறுப்பினர்களை கொண்ட பல்லுயிர் பன்மிய மேலாண்மைக்குழு தோற்றுவிக்கப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **<u>தீர்மானம் எண்–866</u>**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | திரு. ஜீ. சுப்பிரமணியன், பி.இ.,எம்.பி.ஏ.,<br>தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் (பொ)<br>புதுக்கோட்டை நகராட்சி. | குழுத்தலைவர் |
| | திரு. சங்கர், வன அலுவலர்,<br>வன அலுவலகம், புதுக்கோட்டை. | செயலாளர். |
| | டாக்டர்.ராஜாமுகமது,எம்.ஏ.,பி,ஜி.எல்.,பி.எச்.டி.,<br>செயலர், இந்திய செஞ்சிலுவை சங்கம்,<br>உதவி இயக்குநர் அருங்காட்சியகம், ஓய்வு | உறுப்பினர் |
| | திரு. GS. தனபதி, பொது செயலர்,<br>இந்திய மன்றம், கம்பன் நகர்,புதுக்கோட்டை. | உறுப்பினர் |
| | திரு.சையது இப்ராகிம்பாபு,<br>பொது நலச்சங்கம்,<br>176, நிஜாம் காலனி 6வது தெரு,புதுக்கோட்டை. | உறுப்பினர் |
| | திருமதி.எஸ். கலா,<br>நம்பிக்கை சுய உதவிக்குழு,காந்தி நகர்,<br>புதுக்கோட்டை. | உறுப்பினர் |
| | திருமதி. குளோரி கிருபாராணி,<br>தன்னம்பிக்கை சுய உதவிக்குழு,<br>505, தஞ்சாவூர் மெயின் ரோடு,புதுக்கோட்டை. | உறுப்பினர் |
| | திருமதி. ஜெ. வெள்ளையம்மாள்,<br>திருவப்பூர் அம்மன் சுயஉதவிக்குழு, | உறுப்பினர் |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>போஸ்நகர் 4ம் தெரு, புதுக்கோட்டை.</td><td></td></tr>
</table>
<table>
<tr><th colspan="2">சிறப்புஅழைப்பாளர்கள்</th></tr>
<tr><td>1</td><td>திருமதி. ஆர். வனஜா, முதன்மை கல்வி அலுவலர், புதுக்கோட்டை.</td></tr>
<tr><td>2</td><td>திரு. குமாரவேல், வட்டார வளர்ச்சி அலுவலர், புதுக்கோட்டை.</td></tr>
<tr><td>3</td><td>திருமதி. துர்கா ரேவதி, வனத்துறை அலுவலர், புதுக்கோட்டை.</td></tr>
<tr><td>4</td><td>திரு. ஜி. மனோகரன், வேளாண்மை இணை இயக்குநர், புதுக்கோட்டை.</td></tr>
<tr><td>5</td><td>திரு.எஸ். அருணாச்சலம், தோட்டக்கலை துணை இயக்குநர், புதுக்கோட்டை.</td></tr>
<tr><td>6</td><td>டாக்டர். பன்னீர்செல்வம், விலங்கு வேளாண்மை துறை , புதுக்கோட்டை.</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:-<br>
மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.8337/2018/எச்2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..10</td>
<td>புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 39, SVL சுப்பிரமணிய நகர், மனை எண்.90 எண் கொண்ட காலியிடத்திற்கு சொத்தின் உரிமையாளர் திருமதி.சங்கரி என்பவரால் பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை ரூ.8000/– ( சலான் எண். 1350776, நாள்.15.07.2013) செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி சொத்தினை சங்கரி என்பவரிடமிருந்து தற்சமயம் A.R.முகம்மது ரபீக் என்பவரால் காலிமனை கிரையம் பெற்று கட்டி அனுமதி கோரி விண்ணப்பம் செய்த பொழுது பாதாள சாக்கடை வைப்புத் தொகை ரூ.8000/– ( சலான் எண். 48352, நாள். 07.03.2018) செலுத்தப்பட்டுள்ளார். எனவே மேற்படி சொத்திற்கு இரண்டு முறை வைப்புத்தொகை செலுத்தியுள்ளதாகவும், இரண்டாவது முறையாக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார்.<br>
மேற்படி மனுதாரரால் பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை இரண்டு முறை செலுத்தப்பட்ட ரசீது ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டதில், இரண்டாவது முறையாக செலுத்தப்பட்ட A.R.முகமது ரபீக் என்பவரது பெயரில் செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 5210/2002/இ2)<br>
அலுவலக குறிப்பு .. மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td><u>தீர்மானம் எண்–867</u><br>
அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..11</td>
<td>இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனம் 2018–2021 ம் ஆண்டு வரை உள்ள மூன்றாண்டு குத்தகையில்</td>
<td><u>தீர்மானம் எண்–868</u></td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2019 வரை உள்ள காலத்திற்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 24.08.2018 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் நகராட்சி காந்தி பூங்கா பராமரித்தல் மற்றும் நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தில் கலந்து கொண்டவர்களால் கேட்கப்பட்ட ஏலக்கேள்வி மற்றும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th rowspan="2">வ. எண்</th><th rowspan="2">உரிம இனம்</th><th rowspan="2">ஏலம் கோரியவர் / ஒப்பந்தப்புள்ளி அளித்தவர் பெயர் மற்றும் முகவரி</th><th colspan="2">உயர்ந்த பட்ச</th></tr>
<tr><th>ஏலக்கேள்வி (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ( ரூபாயில்)</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">நகராட்சி காந்தி பூங்கா பராமரித்தல் மற்றும் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td><td>1.திரு.P.R. ஜாகிர் முகமது,<br>த/பெ. பிரேம் கபூர்.<br>நகரளவு எண்.4038, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை. 622 001</td><td>–</td><td>53,500/–</td></tr>
<tr><td>2.திரு. ரமீஸ்ராஜா.<br>த/பெ அப்துல் அமீது, நகரளவு எண். 4582,கீழ 4ம்வீதி, புதுக்கோட்டை.</td><td>–</td><td>51,500/–</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு.<br><br>
இந்நகராட்சிக்கு சொந்தமான காந்தி பூங்காவை பராமரித்தல் மற்றும் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் குத்தகை இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக வரிசை எண். 1ல் கண்டுள்ள திரு.P.R. ஜாகிர் முகமது, த/பெ. பிரேம் கபூர், நகரளவு எண்.4038, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை என்பவர் ரூ. 53,500/– ( ரூபாய் ஐம்பத்து மூவாயிரத்து ஐநூறு மட்டும் ) ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார்.<br>
எனவே, இந்நகராட்சியின் நிதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு, பொதுமக்கள் நலன் கருதியும், வரிசை எண் 1ல் கண்டுள்ள குத்தகைதாரர் உயர்ந்தபட்ச தொகையாக ரூ.53,500/–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளதால், மேற்படி நபருக்கு உரிமம் வழங்குவதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.( ந.க.எண். 5509/2018/அ4)</td>
<td>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்..12</td>
<td>புதுக்கோட்டை நகராட்சியில் “42” வார்டுகளிலும் கொசுக்களால் தொற்றக்கூடிய நோய்களை தடுக்கும் பொருட்டு கொசுத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள தற்போது பழுதடைந்த நிலையில் இருக்கும் புகை மருந்து அடிக்கக் கூடிய</td>
<td><u>தீர்மானம் எண்–869</u><br>அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | **அடிக்கக்கூடிய வாகன புகைமருந்து அடிக்கும் இயந்திரத்தை பழுது நீக்கம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ**.1,00,000/-**க்கு மன்றத்தின் அனுமதிக்கு**.<br>**அலுவலக குறிப்பு**<br>1. **மன்றம் அனுமதிக்கலாம்**.<br>2. **பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்**.( **ந.க.எண்**.4824/2018/H2 ) | அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..13 | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, கணேஷ்நகர் 18ம் வீதி, கதவு எண்.6 எண் கொண்ட வீட்டிற்கு சொத்தின் உரிமையாளர் திருமதி.A.இருதயமேரி என்பரால் பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை ரூ.5000/– ( சலான் எண். 152485, நாள்.21.01.2011) ம் தேதியன்று செலுத்தப்பட்டுள்ளது. திருமதி.A.இருதயமேரி என்பவரிடமிருந்து தற்சமயம் திருமதி.A.ரஹ்மத்நிஷா என்பவரால் மேற்படி சொத்தினை கிரையம் பெற்று பாதாள சாக்கடை இணைப்பு வழங்க விண்ணப்பம் செய்த போது பாதாள சாக்கடை வைப்புத் தொகை ரூ.5000/– ( சலான் எண். 28695, நாள். 02.11.2017) ஆக கூடுதலாக ரூ.5000+5000 = 10,000/– செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி வீட்டிற்கு இரண்டு முறை வைப்புத்தொகை செலுத்தியுள்ளதாகவும், இரண்டாவது முறையாக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார்.<br>மேற்படி மனுதாரரால் பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை இரண்டு முறை செலுத்தப்பட்ட ரசீது ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. மேலும் மேற்படி வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தின் அளவு கேற்ப வைப்புத் தொகை ரூ.5000/– ம் போக மீதமுள்ள வைப்புத்தொகை ரூ.5000/– ஐ திருமதி.A.ரஹ்மத்நிஷா என்பவரது பெயருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 1281/2018/இ2)<br>அலுவலக குறிப்பு .. மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மானம் எண்–870</u>**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..14 | மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் புதுக்கோட்டைக்கு வருகை தருவதை முன்னிட்டு நகராட்சி புதிய பேருந்து நிலையம் சுத்தம் செய்யவும், பேருந்து நிலையத்தில் உள்ள Bus bays வர்ணம் பூசவும், கட்டிடத்தின் மேல் பகுதிகளில் sunshade வர்ணம் பூசவும், மற்றும் சிறு பூச்சுவேலைகள் மேற்கொள்ளவும், இருபுறமும் உள்ள கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்யவும் பேருந்து நிலையத்தில் உள்ள தாய்மார்கள் பாலூட்டும் அறை வர்ணம் பூசவும் மற்றும் ஆயுதப்படை மைதானத்தில் மழைநீர்வடிகால் பராமரிப்பு செய்யவும் தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.3,70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **<u>தீர்மானம் எண்–871</u>**<br>அலுவலக குறிப்பு 1, 2,3 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2018–2019ம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவா்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 7499/2018/இ1) | |
| பொருள் எண்..15 | இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் ரூ.1.78 இலட்சம் மதிப்பீட்டில் காவல்துறை கண்காணிப்பாளா் முகாம் அலுவலக முன்புறத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு 05.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு திரு.கே. பரமசிவம், நகராட்சி ஒப்பந்ததாரருக்கு இந்நகா்மன்ற தீா்மான எண். 823 நாள்.24.07.2018ல் அனுமதித்துள்ளவாறு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளும்பொழுது தண்ணீா் கிடைக்காததால் கூடுதலாக 220 மீட்டா் ஆழம் பணி மேற்கொள்ளப்பட்டதால் ஏற்பட்ட கூடுதல் செலவினம் ரூ.69,280/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2)மேற்படி கூடுதல் செலவினத்தை குடிநீா் நிதியில் இருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.. (ந.க.எண். 4097/2018/இ1) | **<u>தீா்மானம் எண்–872</u>**<br>அலுவலக குறிப்பு 1, 2, ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..16 | புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வாா்டு எண். 36, ஜானகி நகா், மனை எண்.75-P எண் கொண்ட வீட்டிற்கு சொத்தின் உரிமையாளா் திரு.செல்வம் என்பவரால் பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை ரூ.5000/– ( சலான் எண். 13716, நாள்.21.07.2016) செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்க விண்ணப்பம் செய்த போது வைப்புத் தொகையாக ரூ.8000/– ம் ( சலான் எண். 345200, நாள். 23.11.2017) ஆக கூடுதலாக ரூ.5000+8000 = 13,000/– செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி வீட்டிற்கு இரண்டு முறை வைப்புத்தொகை செலுத்தியுள்ளதாகவும், இரண்டாவது முறையாக செலுத்தப்பட்ட வைப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரி விண்ணப்பித்துள்ளாா்.<br>மேற்படி மனுதாரரால் பாதாள சாக்கடை திட்ட வைப்புத் தொகை இரண்டு முறை செலுத்தப்பட்ட ரசீது ஆவணங்கள் சரிபாா்க்கப்பட்டது. மேலும் மேற்படி வீட்டிற்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்பட்டு நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தின் அளவு கேற்ப வைப்புத் தொகை ரூ.7000/– ம் போக மீதமுள்ள வைப்புத்தொகை ரூ.6000/– ஐ திரு.செல்வம் த/பெ. சுப்பிரமணியன் என்பவரது பெயருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 17990/2017/இ2)<br>அலுவலக குறிப்பு .. மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீா்மானம் எண்–873</u>**<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

பொருள் எண்..17

இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொதுநிதி/குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 02.08.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **பணிகளின் விவரம்** | **மதிப்பீடு ரூபாய் லட்சதில்** | **ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)** | **ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்)** | **ஒப்பந்தப்புள்ளி விகிதம்** |
|---|---|---|---|---|---|
| 1. | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.37 கம்பன் நகரில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மினிபவர் பம்பு அமைத்தல் | 1.66 | கே. தியாகராஜன் | 140048.00 | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| | | | எஸ். சாகுல்ஹமீது | 143122.00 | மதிப்பீட்டை விட 2.07% அதிகம் |
| 2. | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.29 கீழ 6வது வீதி பிள்ளையார் கோவில் அருகில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மினிபவர் பம்பு அமைத்தல் | 1.55 | கே. தியாகராஜன் | 131223.00 | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| | | | எஸ். சாகுல்ஹமீது | 133927.00 | மதிப்பீட்டை விட 1.95% அதிகம் |
| 3. | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.33 உசிலங்குளம் பகுதியில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து மினிபவர் பம்பு அமைத்தல் | 1.65 | கே. தியாகராஜன் | 140123.00 | மதிப்பீட்டை விட 0.03% குறைவு |
| | | | எஸ். சாகுல்ஹமீது | 143122.00 | மதிப்பீட்டை விட 2.07% அதிகம் |
| 4. | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்38 திருவள்ளுவர் நகர் பள்ளிவாசல் அருகே அடிபம்பை சிறுமின்விசை பம்பாக மாற்றி அமைத்தல் | 1.05 | கே. தியாகராஜன் | 87006.00 | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | எஸ். சாகுல்ஹமீது | 88483.00 | மதிப்பீட்டை விட 1.65% அதிகம் |
| 5. | புதுக்கோட்டை நகராட்சி ராஜகுளம் வம்பே கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 1.05 | கே. தியாகராஜன் | 92132.00 | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |
| | | | எஸ். சாகுல்ஹமீது | 94480.00 | மதிப்பீட்டை விட 2.43% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1.மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 6338/2018/இ1)

**<u>தீர்மானம் எண்–874</u>**

அலுவலக குறிப்பு 1, 2, ஏற்று அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பொருள் எண்..18 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.41 தமிழ் நகர் பூங்காவில் onsite comost yard அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2018–2019ம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண். 7499/2018/இ1) | **<u>தீர்மானம் எண்–875</u>**<br>அலுவலக குறிப்பு 1, 2, ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..19 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.40 பாரதி நகர் பூங்காவில் onsite comost yard அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2018–2019ம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3 பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் 7499/18/இ1) | **<u>தீர்மானம் எண்–876</u>**<br>அலுவலக குறிப்பு 1, 2, 3 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..20 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.34 மறைமலை நகரில் உள்ள பூங்காவில் onsite comost yard அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை 2018–2019ம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>3 )பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 7499/2018/இ1 | **<u>தீர்மானம் எண்–877</u>**<br>அலுவலக குறிப்பு 1, 2, 3 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| பொருள் எண்..21 | புதுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.40 வள்ளியப்பா நகர் பூங்காவில் onsite comost yard அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1,75,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:–<br>1) மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மானம் எண்–878</u>**<br>அலுவலக குறிப்பு 1, 2, 3 ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **2)** மேற்படி செலவினத்தை **2018–2019**ம் ஆண்டு பொது நிதியில் இருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**3)**பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலா் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கைமேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 7499/2018/இ1) | |
| பொருள் எண்..22 | இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தின் விரிவாக்கப்பணிகளுக்காக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 26110/P1/14, நாள். 09.12.2014–ன்படி அடிப்படை கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2014–15 ன் கீழ் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய உள்பகுதியில் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கனவே பேருந்து நிலைய உட்புறம் உள்ள தங்கும் விடுதியை ஆண்டு குத்தகை இனத்திலிருந்து 2015–2016 முதல் நீக்கம் செய்யப்பட்டு, 25 அறைகள் காலியாக உள்ள நிலையில் அவற்றை பயன்பாட்டுக்கு கொண்டுவரவும், நகராட்சி நிதிநிலையை பெருக்கும் நோக்கிலும், பயணிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும் பேருந்து நிலைய உட்புறக்கடைகளாக மாற்றி அமைத்திடவும், அரசாணை (2டி) எண். 222, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 26.11.2007–ன்படி உள்ளாட்சி அமைப்புகளில் காலியாக உள்ள இடங்களை வருவாய் தரத்தக்க இனங்களாக கட்டப்படும் வணிக வளாகங்கள் போன்றவைகளை கட்டுவதற்கு முன்பே முன் ஏலம் (Pre Auction) விட்டு நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, மேற்படி காலியாக உள்ள 25 அறைகளை கடைகளாக மாற்றி அமைத்திட நகர் ஊரமைப்பு இயக்குநர் அலுவலகம் மூலம் உரிய அனுமதி பெற்றும், முன்பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிட கடை 1–க்கு ரூ.5.00 இலட்சம் வைப்புநிதியாக பெற்றும், மேலும் ரூ.10.00 இலட்சம் மதிப்புள்ள சால்வன்சியும் அல்லது சால்வன்சிக்கு பதிலாக கூடுதல் வைப்பு தொகையாக ரூ.2.50 இலட்சம் பெற்று உரிய மேல்நடவடிக்கை எடுத்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டு, மேற்படி மன்ற தீர்மானம் எண். 346, நாள். 22.01.2016ல் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளபடி, கடந்த நான்கு முறை பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரியும் கடை எண்கள் 23 மற்றும் 36 ஐ தவிர எந்த கடைகளும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. இந்நிலையில் பொதுமக்களிடமிருந்து ஏல வைப்புத்தொகையை குறைக்க கோரி, கோரிக்கை வைக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 108/2016/அ4)<br>அலுவலக குறிப்பு :–<br>அ) நான்கு முறை முன் பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரியும், கடைகள் ஏலம் போகாததை கருத்தில் கொண்டும், நகராட்சி நிதி நிலையை மேம்படுத்தும் நோக்கிலும், மேற்படி பொதுமக்களின் கோரிக்கையை ஏற்றும், மேற்படி மன்றத் தீர்மானம் எண். 346, நாள். 22.01.2016 ஐ ரத்து செய்து, ஏலப் பொறுப்புத் தொகையை ரூ.3.50 இலட்சமாகவும் , சால்வன்சி தொகையை ரூ.5.00 இலட்சமாகவும், சால்வன்சி இல்லாவிடில் கூடுதல் வைப்புத்தொகை ரூ.1.50 இலட்சமாகவும் குறைத்து ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>ஆ) மேற்படி பொது ஏல / ஒப்பந்தப்புள்ளி கோரிட தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்திடவும், இதர விளம்பர | **<u>தீர்மானம் எண்–879</u>**<br>அலுவலக குறிப்பு அ , ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>செலவினங்களையும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள் எண்..23</td><td>புதுக்கோட்டை நகராட்சி சுகதாரப்பிரிவிற்கு தேவைப்படும் கூட்டுப்புழுக்கொல்லி ரெடிமிக்ஸ் மருந்து கொள்முதல் செய்யும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினபூமி நாளிதழில் 20.04.2018–ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டதற்கு, விளம்பரக் கட்டணம் ரூ.9,476/–ஐ தினபூமி நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.9547/2017/எச்2 )</td><td><u>தீர்மானம் எண்–880</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..24</td><td>புதுக்கோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவைப்படும் நுண்ணுயிர்திரவம் ( EM Solution) கொள்முதல் செய்யும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பை தினக்குரல் நாளிதழில் 20.04.2018–ம் தேதி விளம்பரம் செய்யப்பட்டதற்கு, விளம்பரக் கட்டணம் ரூ.25,760/–ஐ தினக்குரல் நாளிதழுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். ( ந.க.எண்.2552/2018/எச்.2 )</td><td><u>தீர்மானம் எண்–881</u><br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் எண்..25</td><td>இந்நகராட்சியில் 2018–2019ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 31.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணிகளின் விவரம்</th><th>மதிப்பீடு ரூபாய் லட்சதில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்)</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="2">1)</td><td rowspan="2">புதுக்கோட்டை நகராட்சிசி வார்டு எண்.41 தமிழ்நகர் பூங்காவில் நுழைவு வாயில், ஆர்ச் சொதை வேலை, பைப்லைன் அமைத்தல் மற்றும் இதர பணிகள் செய்தல்</td><td rowspan="2">6.30</td><td>சி. அரவிந்தன்</td><td>546766.00</td><td>மதிப்பீட்டை விட 0.02% குறைவு</td></tr>
<tr><td>எஸ். சரவணன்</td><td>553000.00</td><td>மதிப்பீட்டை விட 1.10% அதிகம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :–<br>அ) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சி. அரவிந்தன், நகராட்சி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.02% குறைவாக உள்ளதால் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ஆ)அவசர அவசியம் கருதி முன் அனுமதி வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3326/2018/இ1)</td><td><u>தீர்மானம் எண்–882</u><br>அலுவலக குறிப்பு அ , ஆ ஏற்று அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

பொருள் எண்..26

இந்நகராட்சியில் **2018–2019**ம் ஆண்டு பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள **12.07.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூபாய் லட்சதில் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (ரூபாயில்) | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|---|
| 1) | புதுக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் சுத்தம் செய்தல், Bus bays வர்ணம் பூசுதல், Sunshade வர்ணம் பூசுதல், கழிப்பிடம் மராமத்து பணிகள் செய்தல் மற்றும் தாய்மார்கள் பாலூட்டும் அறை வர்ணம் பூசுதல், ஆயுதப்படை மைதனாத்தில் மழைநீர் வடிகால் மராமத்து பணிகள் செய்தல் | 3.70 | ஆர். மணிகண்டன் | 313827.00 | மதிப்பீட்டை விட **0.19**% குறைவு |
| | | | கே. பரமசிவம் | 321051.00 | மதிப்பீட்டை விட 2.07% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

(1) மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. ஆர். மணிகண்டன், நகராட்சி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப் புள்ளி மதிப்பீட்டை விட **0.19**% குறைவாக உள்ளதால் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7499/2018/இ1 )

**<u>தீர்மானம் எண்–883</u>**

அலுவலக குறிப்பு 1, 2 ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**ஓம்.ஜி.சுப்பிரமணியன்**

**தனிஅலுவலர்**
**மற்றும் நகராட்சி ஆணையர்(பொ)**
**புதுக்கோட்டை நகராட்சி**